


# 16.05.2026 செய்திகள்

## இந்தியாவில் யு.ஏ.இ., செய்யும் முதலீடு...

» ராணுவ ஒத்துழைப்பு:-

- இந்தியா மற்றும் யு.ஏ.இ., இடையே ராணுவ ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தம் வெறும் ராணுவப் பயிற்சிகளுக்கு மட்டும் அல்லாமல், பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில் கூட்டாக இணைந்து மேம்படுத்துவது மற்றும் உற்பத்தி செய்வது ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகிறது.
- மேலும், இரு நாடுகளுக்கு இடையே உளவுத் தகவல் பகிர்வு, கடல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் இந்த ஒப்பந்தம் வலுவான இணைப்பை ஏற்படுத்தும்.

» எரிசக்தி:-

- இந்தியாவில் உள்ள அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்தின் கச்சா எண்ணெய் சேமிப்பை 3 கோடி பீப்பாய்களாக உயர்த்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- மத்திய அரசின் ஐ.எஸ். பி.ஆர்.எல்., நிறுவனம் இதை நிர்வகிக்கும். இதற்கு அபுதாபி நிறுவனம் கட்டணம் செலுத்தும். இதன் விற்பனையில் இந்தியாவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மேலும், இந்தியன் ஆயில் நிறுவனம் மற்றும் அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் இடையே சமையல் எரிவாயு வினியோகத்துக்கான நீண்டகால ஒப்பந்தம் கையெழுத்தானது.

» கடல்சார் ஒத்துழைப்பு:-

- குஜராத்தின் வாடினாரில் புதிய கப்பல் பழுதுபார்க்கும் மையம் அமைக்க இந்தியா யு.ஏ.இ., இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியது.
- இரு நாடுகளின் சுங்க மற்றும் துறைமுக அதிகாரிகளை டிஜிட்டல் முறையில் இணைக்கும், 'மைத்ரி' மெய்நிகர் வர்த்தக வழித்தடம் தொடங்கப்பட்டது. இது சரக்கு போக்குவரத்தின் செலவு மற்றும் நேரத்தை பெருமளவு குறைக்கும்.

» தொழில்நுட்பம்:-

- இந்தியா மற்றும் யு.ஏ.இ., தொழில்நுட்ப நிறுவனங்கள் இடையே அதிநவீன சூப்பர் கம்ப்யூட்டர் தொகுப்புகள் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. இது செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்துக்கு பெரும் ஊக்கமளிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

» ரூ. 48,000 கோடி முதலீடு:-

- இந்தியாவில் 48,000 கோடி ரூபாய் முதலீட்டை யு.ஏ.இ., செய்ய உள்ளது. ஆர்.பி.எல்., வங்கியில் 28,800 கோடி ரூபாய்; அபுதாபி முதலீட்டு ஆணையம் மூலம் உட்கட்டமைப்பு திட்டங்களில் 9,600 கோடி ரூபாய்; அபுதாபியின், 'இன்டர்நேஷனல் ஹோல்டிங்' நிறுவனம் மூலம், 'சம்மான் கேபிடல்' நிறுவனத்தில், 9,600 கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்தானது.

SURESH'